**TAMIL NADU ELECTRICITY REGULATORY COMMISSION**
**No. 19-A, Rukmini Lakshmipathy Road, (TIDCO Complex),**
**Egmore, Chennai 600 008**
Phone: ++91-44-28411376 / 28411378 / 28411379 Fax: ++91-44-2841137
**email:** tnerc@nic.in **Website:** www.tnerc.gov.in

எண். 04 / 2010
நாள் 05-04-2010

**மதுரையில் தமிழ்நாடு மின்சார வாரியத்தின் மின்கட்டணம் மாற்றி அமைத்தல் மனு மீது பொதுமக்கள் கருத்துக்கேட்புக் கூட்டம்**

தமிழ்நாடு மின்சார வாரியம், நுகர்வோர் வகையினர் ஒருசிலருக்கு மின் கட்டணத்தை உயர்த்துவதற்காக தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்திடம் மனு தாக்கல் செய்துள்ளது. இந்த மனுவானது, மின் கட்டண மனு (TP 1/ 2010 ) ஆக ஆணையத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாடு மின்சார வாரியம், இந்த மனு குறித்த சிறப்பியல்புகளை 26-2-2010 அன்று முன்னணி செய்தித் தாள்களில் வெளியிட்டுள்ளது. இந்த மனுவின் நகல் மண்டல மின் பகிர்மான தலைமைப் பொறியாளர் அலுவலகங்களிலும், சென்னையிலுள்ள தலைமை நிதிக்கட்டுப்பாட்டு அலுவலர் / வருவாய் அலுவலகத்திலும் பொது மக்களுக்கு கிடைக்குமாறு வழி செய்யப்பட்டுள்ளது மற்றும் ஆணையத்தின் இணையதளத்திலும் (www.tnerc.gov.in) தமிழ்நாடு மின்சார வாரியத்தின் இணையதளத்திலும் (www.tneb.in) வெளியிடப்பட்டுள்ளது.

ஆலோசனை நடவடிக்கையின் தொடர்ச்சியாக, ஆணையத்தின் தலைவர் திரு. எஸ். கபிலன், உறுப்பினர்கள் திரு. ஆர். ராஜூபாண்டி மற்றும் திரு. கே. வேணுகோபால் ஆகியோர் தலைமையில் 08-4-2010 (வியாழக்கிழமை) அன்று மதுரையில் உள்ள தமிழ்நாடு தொழில் வர்த்தக சங்க பவள விழா ஹட்சன் பேரவை அரங்கம், காமராஜர் சாலை, மதுரை – 625 009 இல் காலை 10.30 மணி முதல் பொது மக்கள் கருத்துக்கேட்புக் கூட்டம் நடக்க உள்ளது. ஆர்வம் உடையவர்கள் ஆணையத்தின் முன்பு ஆஜராகி மறுப்புரைகளையும், கருத்துரைகளையும் எடுத்துரைக்கலாம். அவ்வாறு விருப்பம் உடையவர்கள் கூட்டம் நடைபெறும் இடத்தில் காலை 9.00 மணி முதல் 11.00 மணிக்குள் தங்களுடைய பெயர்களை பதிவு செய்து கொள்ள வேண்டும்.

**(எம். வேலாயுதபெருமாள்)**
உதவி செயலாளர்